1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) வடஆற்காடு மாவட்டத்தில் 1977-78-ல் தொழிலாளர் நலப்பணிக்காக தொழிலாளர் நல நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட தொகை 57,442.93 ரூபாய் ஆகும்.

(ஆ) தொழிலாளர் நலப் பணிக்காக குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி ஆகிய இடங்களில் முறையே தையல் பயிற்சி நிலேயம் ஒன்றும் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் 1-1-76 முதல் நடைபெற்று வருகிறது.

சென்னே—மகாபலிபுரம் பகுதியில் ஹைட்ரோலாஜிகல் சர்வே.

*வினு எண் 189—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சென்னேயிலிருந்து மகாபலிபுரம் வரையில் ஹைட்ரோலாஜிகல் சர்வே நடந்துள்ளதா?

(ஆ) அதன் விளேவாக அமைக்கப்பட்ட குழாய்களில் நல்ல தண்ணீர் கிடைப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னேக்கு தெற்கே திருவான்மியூரிலிருந்து கோவளம் வரை (பக்கிங்காம் கால்வாய் கடலுடன் முகக்குமிடம் வரை) ஹைட்ரோ லாஜிகல் சர்வே நடத்தப்பட்டுள்ளது.

(ஆ) உண்மை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலேவர் அவர்களே, சென்னேயிலிருந்து மகாபலிபுரம் வரை ஹைட்ரோ லாஜிக்கல் சர்வே, பூகர்ப்ப இயல் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசாங்கத்தின் உதவியோடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இடங்களில் பெரிய குழாய்களே அமைத்து இருக்கிறுர்கள், அங்கே மிகவும் நல்ல தண்ணீர், குடிப்பதற்கு லாயக்கான தண்ணீர் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் அதைப் பரிசீலித்து அந்தத் தண்ணீரை சென்னேக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலேவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் அப்போது இருந்த மாநில அரசே அதைச் செய்ததாகத்தான் இருக்கிறது. மத்திய அரசு செய்ததாக மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறுர்கள், அந்தத் தகவலேக் கொடுத்தால் நல்லதாக இருக்கும். அங்கே கிடைக்கிற தண்ணீரைப் பரிசீலித்து அங்கே இருந்து நிரம்பத் தண்ணீரை கொண்டு வரலாமா என்று ஆலோசித்துக் கொண்டு இருக்கிறேம். அநேகமாக 30 ஆம் தேதியிலே இருந்து கூட தென் சென்னேக்குக் கொண்டு வருகிறேம், அதற்காக ஒரு விழாவையே கூட நடத்தி கண்அதித் தணீர் கொடுக்கலாம் என்று இருக்கிறேம்.